நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சிப் பகுதியில், 27.05.2023 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், முடிவுற்ற பாதாள சாக்கடை திட்டப்பணிகளை தொடங்கி வைத்தனர். உடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ தாஸ் மீனா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜீத், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, காரைக்குடி நகர்மன்ற தலைவர் சே.முத்துத்துரை உட்பட பலர் உள்ளனர்.

நாகர்கோவில் மாவட்டம் குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குருந்தன்கோடு கிழக்கு மேற்கு ஒன்றிய பகுதிகளைச் சார்ந்தபல்வேறு கட்சிகளைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் தி.மு.க. மாநில அயலக அணி துணைச் செயலாளர் பாபு வினி பிரட் ஏற்பாட்டில் கிழக்கு மாவட்ட செயலாளரும்மேயருமான மகேஷ் முன்னிலையில் மாற்றுக் கட்சியை சேர்ந்த றோபின் டேவிட் ஜெகதீஷ் டாக்டர் ஆலிவர் ராம் கவிதா சுஜாதா செல்வின் ராஜ் ஜான் பீட்டர் பெனட்ராஜ் ஜெகன் ஜஸ்டின் ராஜன் பால்பாண்டி ஆகியோர் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் கிழக்கு மாவட்ட அவை தலைவர் பன்னீர்செல்வம் குளச்சல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் அருண் துணைச் செயலாளர் சோமு மாநகர செயலாளர் வக்கீல் ஆனந்த் ஒன்றிய செயலாளர்கள்பி எஸ்.பி. சந்திரா சுரேந்திர குமார் ராஜக்கமங்கலம் ஒன்றியதுணைத் தலைவர் சரவணன் தொண்டரணி அமைப்பாளர் எம் ஜே.ராஜன் மண்டல தலைவர் ஜவகர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்பு!

நெல்லை வள்ளியூரில் புதிய மருத்துவக் கட்டடம்!

கட்டுமானப் பணியை அமைச்சர் மா. சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்

நெல்லை.மே 29-

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் ரூபாய் 31 கோடி மதிப்பில் மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனை கட்டிடம் கட்டு மான பணிகளை வருகிற ஜூன் 2ம் தேதி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் பங்கேற்று அடிக் கல் நாட்டி துவக்கி வைக்க உள்ளார். மருத்துவமனை அமைய உள்ள இடத்தை தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பார் வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் ரூபாய் 31கோடிசெலவில் மாவட்ட அரசு அலுவலகம் கட்டிட கட்டுமான பணிகளை வரு கிற 2.6.2023 அன்று காலை 10:30 மணிக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச் சர் மா. சுப்பிரமணியன் பங் கேற்று அடிக்கல் நாட்டில் துவக்கி வைக்கிறார்.

நெல்லை மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு தென்காசியை தலைமை இடமாகக் கொண்ட புதிய மாவட்டம் உருவாக்கப்பட் டது. இதனை அடுத்து தென்காசி செயல்பட்டு வந்த திருநெல்வேலி மாவட் டத்தின் தலைமை மருத்துவ மனை தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனை யாக செயல்பட தொடங்கி யது.இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் மாவட்ட அரசு தலைவர் மருத்துவ மனை நெல்லை மாவட்டத் தில் உள்ள ஒரு நகரத்தில் தொடங்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் தமிழ்நாடு சட் டப்பேரவை தலைவர் மு.அப்பாவு (இராதாபுரம்) தனது தேர்தல் அறிக்கையி லும் பிரச்சாரத்தின் போதும் வள்ளியூரை தலையிடமாக கொண்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனை யும், மருத்துவப் பணி இணை இயக்குனர் அலுவ லகம் அமைக்கப்படும் என உறுதி அளித்தார்.இதனை செயல்படுத்தும் வகையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மா.சுப்பிரமணியன் மற்றும்அதிகாரிகள்மாவட்ட தலைமை மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்தனர்.

வள்ளியூரில் மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனையும்,மருத்துவப் பணி இணை இயக்குனர் அலுவ லகத்தையும் அமைக்க வேண்டும் எனவும் அதற் காக நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை விரைவாக தொடங்க வேண்டும் என வும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சட்டப்பேர வைத் தலைவர் மு.அப்பாவு வலியுறுத்தியதை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி உத்தரவிட்டார்கள்.இதை அடுத்து தமிழ்நாடு அரசு வள்ளியூரில் மாவட்ட தலைமை மருத்துவமனை அமைக்கவும் அதற்கான கட்டிடங்கள் மற்றும் உபக ரணங்கள் வாங்கவும் ரூ. 31 கோடி நிதியை வழங்கியது.

வள்ளியூர் புதிதாக அமைக்கப்பட உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூபாய் 30 கோடியில் அனைத்து வசியுடன் நான்கு மாடி கட் டிடமும் ரூபாய் 1கோடி யில் ஒருங்கிணைந்த பரி சோதனை நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 200 படுக்கை வசதிக ளோடு தரைத்தளத்தில் அவ சர சிகிச்சை மையம்,ஆம்பு லன்ஸ் வசதி உள்ளிட்ட அனைத்து மருத்துவ வசதிக ளுடன் 24 மணி நேரமும் செயல்படுவதுடன், மருத்து வர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் உள்ளிட்ட 300 பேர் பணிய மர்த்தப்பட உள்ளனர். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அடுத்த நிலையில் இம்மருத்துவ மனை உருவாக்கப்பட உள் ளது.

இந்நிலையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனை அமைய உள்ள இடங்களை சட்டப்பே ரவை தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டு முன்னேற் பாடு பணிகளை ஆய்வு மேற்கொண்டு வரைப டத்தை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்,ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, மாவட்ட துணை செயலாளர் நம்பி, வள்ளியூர் பேரூராட்சி தலைவர் ராதா, மருத்துவப் பணி இணைய இயக்குனர் மருத்துவர் லதா, சுகாதாரப் பணி துணை இயக்குனர் ராஜேந்திரன், வள்ளியூர் அரசு மருத்துவ ர்கவிதா மற் றும் செவிலியர்கள் மருத்து வ பணியாளர்கள் மற்றும் பொதுப் பணித்துறை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

குன்றத்தூர் தா.மோகலிங்கம் 11வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

திருவுருவப் படத்திற்கு - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஆர்.எஸ்.பாரதி மலர் அஞ்சலி!

குன்றத்தூர், மே.29-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் அவர்க ளின் தந்தை, குன்றத்தூர் பேரூர்க் கழக முன்னாள் செய லாளர் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலை வர் நினைவில் வாழும் தா.மோகலிங்கம் அவர்க ளின் 11வது ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது.

குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் அன்னாரது திருஉருவப் படம் மலர்களால் அலங்க ரித்து வைக்கப்பட்டிருந்தது. அவரது படத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் கழக அமைப்புச் செய லாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகி யோர் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல் வப்பெருந்தகை, காஞ்சி புரம் நாடாளுமன்ற உறுப் பினர் க.செல்வம், எஸ். எஸ்.பாலாஜி, மீ.அ. வைதி யலிங்கம், த.துரைசாமி, இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்டப் பொ ருளாளர் வெ.விஸ்வநாதன்,

எ.கோதண்டம், வீ. தமிழ்மணி, எஸ்.ஆர்.எல். இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க. அன்புச் செல்வன், ஆதிமா றன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், காஞ் சிபுரம் தெற்கு மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே. வி.தமிழ்செல்வன், காஞ்சிபு ரம் நகர முன்னாள் செயலா ளர் சி.வி.எம்.அ.சேகர், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் காஞ்சி வி.எஸ். ராமகிருஷ்ணன்,

பகுதி செயலாளர்கள் பி. குணாளன், என்.சந்திரன், த. ஜெயகுமார், வே.கரு ணாநிதி, எஸ்.சேகர், ஜோசப் அண்ணாதுரை, மாடம்பாக்கம் ஆர்.நடரா ஜன், ஏ.கே.கருணாகரன், செம்பாக்கம் சுரேஷ், இ.எஸ்.பெர்னாட்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணா நிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந் தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர் டி.பாபு, எஸ்.நரேந்திரன், ஜெ.சண் முகம், எம்.கே.டி.கார்த்திக், எஸ்.ஜபருல்லா, கோ.சத்திய மூர்த்தி, பேரூர் செயலாளர் கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவ ராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபா லன், கீதா ஆனந்தன், ஆர். எஸ்.சங்கர், க.தேவேந்தி ரன், மூவரசம்பட்டு சதீஷ்,கே.எத்திராஜ், எம். செல்வகுமார், ம.கணேஷ் பாபு, செ.அருள்தேவி, மு.ரஞ்சன், தொ.மு.ச. பேரவைச் செயலாளர் பொன்னுராம், மாநில சுற் றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெய காந்த் பாரதி,

கோல்டு டி.பிரகாஷ், செந்தில் தேவராஜ், ஆர். ஆர்.ஜெயராம் மார்த்தாண் டம், தி.க.பாஸ்கரன், எஸ். ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், எம்.எஸ்.கதிரவன், ஜான் தினகரன், காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் இளை ஞர் அணி துணை அமைப் பாளர் எஸ்.பொன்னா (எ) வெங்கடேசன், சரஸ்வதி மனோகரன், உமாமகேஸ் வரி வந்தேமாதரம், உதயா க ரு ண ா க ர ன் , தே.திருநாவுக்கரசு, புனித தோமையர்மலை ஒன்றிய துணைத் தலைவர் பி.பிர சாத், நந்திவரம் ஜி. கே.லோகநாதன், பரசுரா மன்,

தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசி வம், செம்பாக்கம் கண் ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சென்னை, மெரினா கடற்கரை லூப் சாலை, டூமிங் குப்பத்தில், 27.5.2023 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு ஆகியோர் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டுத் திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாமினை தொடங்கிவைத்து பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தேசிய நலவாழ்வுக் குழும இயக்கு நர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந் ராவ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தி.மு.க.!

தமிழ்நாடு காட்டும் வழியை இந்தியா முழுவதும் பின்பற்றும்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 29-

'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தி.மு.க.வின் பலம் வெறும் தேர்தல் வெற்றியில் இல்லை என்ற ரகசியம் வித் தைகளைநடத்தும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எசிற்குப் புரியாது! கொள்கை லட்சியம் என் பது வருணாசிரமஒழிப்பு, 'அனைவருக்கும் அனைத் தும்' என்ற சமூகநீதி,சமத்து வம்,சுயமரியாதை,பகுத்தறி வுஅடங்கிய "திராவிடத்தில்" உள்ளது என்பதைத்தான் 2024 ஆம் ஆண்டு நடைபெ றப் போகும் நாடாளுமன் றப் பொதுத்தேர்தல் அவர் களுக்கு உணர்த்தவிருக்கிறது; புதியதோர் மக்களாட்சியை, மதச்சார்பற்ற, ஜனநாயக மாக ஆக்கிட தமிழ்நாடு காட்டும் வழியை அனைத்து இந்தியாவும் பின்பற்றும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீர மணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:

தமிழ்நாட்டை எந்த வலையை விரித்தாவது தங் களது காவி அதிகாரப் பரப் புக்குள் கொண்டுவர ஆர். எஸ்.எஸ்., அதன் அரசியல் பிரிவான பா.ஜ.க., அதன் திறமை வாய்ந்த வித்தை மேதை பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் பல்வேறு 'பஞ்ச தந்திரங்களை'யும் தாண்டிய 'தசத்' அல்ல, 'பஞ் சதந்திர உபாயங்களையும் கையாண்டு முயலுகின்றனர்.

காரணம், நாடாளுமன் றத்தின் மக்களவைக் கூட் டத்தின்போது ஒருமுறை முழங்கிய ராகுல் காந்தி, நேருக்கு நேராக "நீங்கள் எத்தனை ஆண்டு முயன்றா லும் உங்களால் தமிழ்நாட் டின் ஆட்சியைப் பிடிக்க முடியாது; அந்த மண் சமூக நீதி மண்" என்பதைப் பகி ரங்கமாகவே ஆணி அடித்த தைப்போல அறைகூவி நாடாளுமன்ற ஆவணமா கப் பதிய வைத்துள்ளார்!

'மித்திர பேதம்' என்பது பஞ்ச தந்திரங்களில் முக்கிய மானது என்பதை உணர்ந்த ஆரியம் அரசியலில் ஆர். எஸ்.எஸ்., பி.ஜே.பி., செல்வி ஜெயலலிதாவின் மறைவிற்குப் பின், தமிழ் நாடு பெரிய அரசியல் கட் சிகளில் ஒன்றான அ.தி. மு.க.வை, அதற்காகவே அந் நாளைய ஒன்றிய அமைச்சர் வெங்கய்யா நாயுடுவை, செல்வி ஜெயலலிதாவின் இறுதிக் கட்டத்தில் மருத்து வமனையிலே அமர்த்தி, பிறகு பிரதமர் மோடி, தலையில் கையை வைத்து ஆசீர்வதித்து, அதனை இரண்டு பிரிவுகளாக்கி, பிறகு பிரித்த கைகளை அந் நாளைய ஆளுநர் மூலமே கைகோர்க்கும் நாடகத்தை யும் நடத்தி, பிறகு அவ்விரு அமைப்புகள், அதைத் தாண்டிய சிலர் இவற்றை தனி அணியாக்கியும், பிறகு "அனைவரும் ஒன்றாகுங் கள்" என்று கூறி, பலவீன மாக்கி, "வித்தைகளையும்" காட்டி அதன் விளைவு கண்டு அவர்கள் அச்சப் படும் நிலைக்கு ஆளாக்கி, நல் லதோர் 'அரசியல் பொம்ம லாட்டம்' இன்றும் நடத்தி வருகின்றது!

ஆனால், 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தி.மு.க., அதன் தலைமையி டம் அவ்வித்தைகள் பலிக்க வில்லை - கொள்கையை, லட்சியத்தை, இயக்கத்தை, கட்சியை முன்னிறுத்தி ஆட்சி அதிகாரம் அதன் பின்னர்தான் என்று திட்ட வட்டமான திட முடிவுடன் செயல்படும் அவ்வாட்சி கட்சி நிலைகண்டு, தமிழ் நாட்டை வளைப்பதற்கு வேறு புதிய புதிய வலைக ளைத் தேடிக் கண்டு பிடிக்கிறது ஆரியம்.

"தமிழ் உணர்வுதானே தி.மு.க.வை ஆட்சியில் அமர்த்தியது; எனவே, தமிழ் முகமூடியைப் பயன் படுத்தினால் தமிழ்நாட்டில் வாக்காளர்களை வயப்ப டுத்தலாம்" என்று ஆர்.எஸ். எஸ். திட்டமிட்டு, அதனை பிரதமர் மோடி வாயிலாக ஓர் உத்தியாகவே கையாள வேண்டும் என்று பார்க்கின் றனர்!

தமிழ்நாட்டிற்கு வரும் போதெல்லாம் பிரதமர் மோடி, தமிழின், தமிழனின் பெருமை பேசுகிறார்! அவ் வையார், பாரதியார் பாடல்களைத் தேடிக் கண் டுபிடித்துப் பேசுகின்றார்; திருவள்ளுவர்பற்றி பெருமை பேசி, அவருக்கும் காவிச் சாயமடிக்கின்றார்! ஆனா லும், அது தமிழ்நாட்டவரை ஏமாற்றப் பயன்பட்டு, பலன் விளைவிக்க வில்லை.

உண்மை வேறு; ஒப்பனை வேறு!

காரணம், அவை அவர்க ளுக்கு மனதார நேசிக்கும் கொள்கைத் திட்டம் அல்ல; "சமஸ்கிருதம்தான் நாட் டின் பொது மொழி ஒரே கலாச்சாரம் அதற்கு 1000 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்குபவர்கள் அதே வரி சையில் உள்ள சமஸ்கிருதத் தைவிட பல கோடி மக்கள் பேசும், எழுதும் 'மக்கள் மொழி' வளர்ச்சிக்கு எவ்வ ளவு தொகை இதுவரை ஒதுக்கி உள்ளார்கள்? அதுவே உண்மை வேறு; ஒப்பனை வேறு என்று காட்டுகிறதே!

இதோ அந்தப் புள்ளி விவரம்:

சமஸ்கிருதத்திற்கு 3 ஆண்டுகளில் ரூ.643 கோடி

2017-2018 ஆம் ஆண்டில் ரூ.198.31 கோடி.

2018-2019 ஆம் ஆண்டில் ரூ.214.38 கோடி.

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.231.15 கோடி

தமிழ் மொழிக்கு 3 ஆண் டுகளில் ரூ2285 கோடி

2017-2018 ஆம் ஆண்டில் ரூ.10.59 கோடியும்,

2018-2019 ஆம் ஆண்டில் ரூ4.56 கோடியும்,

2019-2020 ஆம் ஆண்டில் ரூ7.7 கோடியும் ஒதுக்கப் பட்டன.

"பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸின் தமிழ் அபிமானம் ஓர் "அர சியல் மயக்க பிஸ்கெட்"

என்பதை தமிழ்நாட்டு மக் கள் புரிந்து கொண்டு, ஏற்க மறுக்கிறார்கள்.

1. மற்றொரு உத்தி வித்தை காசியில் (பிரதமர் தொகுதியில்) தமிழ், தமிழர் கள் சங்கமம் என்ற ஒரு நாடகம் அரசு செலவில் சுமார் 2000 பேரை அங்கே அழைத்து, சில துதிபாடி களை விட்டு பா.ஜ.க. ஆர். எஸ்.எஸ்.சை வளர்க்க சில நடவடிக்கைகள். 'காதொ டிந்த ஊசி' பலன்கூட அத னால் தமிழ்நாட்டில் பா.ஜ. க.வுக்கு ஏற்படவில்லை! அதன் பிறகு பா.ஜ. கட் சியே கலகலத்த கட்சியாகு மளவிற்கு, பலரும் அதன் தலைவர்மீது குற்றப் பத்தி ரிகை வாசித்து வெளியேறி யதுதான் மிச்சம்!

2. அதன் பிறகு குஜராத் தமிழ்நாட்டிற்கும் இடை யோன தொடர்புகளைக் கொண்டாடும் வகையில், "சவுராஷ்டிரா தமிழ் சங்க மம்" கடந்த ஏப்ரல் 18 ஆம் தேதிமுதல் ஏப்ரல் 30 ஆம் தேதிவரை நடத்தினர் - அதற்கென வழமைபோல ஒருவகை புதுவகை கற்பனை வரலாற்றுப் புனைவுகள்.

மிஞ்சியது ஏமாற்றமே!

வரலாற்று அறிஞர்கள்!

இஸ்லாமியத் தீவிரவாதி கள் படையெடுப்பால்தான் தென்னிந்தியாவிற்கு குஜ ராத் சவுராஷ்டிரர்கள் சென்றனர் என்று ஓர் ஆதாரமில்லா அளப்பு.

தொழில் தேடி பல பகுதி களுக்குச் சென்றதுபோ லவே, சவுராஷ்டிரர்கள் தென்னிந்தியா சென்றனர் என்று வரலாற்று அறிஞர் கள் தெளிவுபடுத்தியுள்ளனர்!

பாரதீய பாஷா சமித் தலைவர் என்ற கிருஷ்ண சாஸ்திரி என்ற பார்ப்பனர் ஒன்றிய அரசின் கல்வித் துறையை வைத்து இப்படி ஒரு வித்தை.

அடுத்து தமிழ்நாட்டுக்கா ரர்களை 'கேதார்நாத் சங்க மம்' நடத்தி அழைத்துச் செல்லும் திட்டம்!

முன்பு ராஜேந்திர சோழனை முன் வைத்து தமிழ்நாட்டை வளைக்கும் ஆர்.எஸ்.எஸ். உத்தி எதிர் பார்த்த ஆதரவைத் திரட்டப் பயன்படவில்லை என்றவுடன், இப்போது அலகா பாத் கண்காட்சியில் வைக்கப்பட்ட செங் கோலை எடுத்து வந்து, பலத்த எதிர்ப்புக்கிடையே நாளை (28.5.2023) பிரதமர் மோடியால் திறக்கப்பட வி ருக்கும் புதிய நாடாளுமன் றக் கட்டடத் திறப்பு விழா விற்கு 20 பண்டார சந்நிதி கள் என்று மடாதிபதிகளை அழைத்து செங்கோல் விழா (இரண்டாவதாக) அதுவும் சோழர் காலத்துச் செங் கோல் என்று ஒரு 'புரூடா'வை விட்டு, சோழர் களின் சொந்தக்காரர்கள் நாங்களே, நந்தியைக் காட் டுகிறோம் என்கிறார்கள் மொகஞ் சதாரோ திராவி டக் காளைகளை 'குதிரை' யாக்கிய இந்த அரசியல் குதர்க்கவாதிகள்!

காஞ்சி சங்கராச்சாரியார் கருவில் உதித்த திட்டம் ஆச்சாரியாரால் ஆதரிக்கப் பட்ட மதச்சார்பை நிலை நிறுத்த பதிவு

செய்யப்பட்ட ஒரு திட்டம்!

தமிழ்நாட்டு வாக்காளர் களுக்கு "குளோரோஃபாம்" கொடுத்து ஏமாற்றிவிட முடியாது!

இவற்றால் ஒருபோதும் தமிழ்நாட்டை நீங்கள் வசப் படுத்தி, தமிழ்நாட்டு வாக் காளர்களுக்கு "குளோ ரோஃபாம்" கொடுத்து ஏமாற்றிவிட முடியாது!

'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தி.மு.க.வின் பலம் வெறும் தேர்தல் வெற்றியில் இல்லை என்ற ரகசியம் அவர்களுக்குப் புரியாது!

அதன் கொள்கை லட்சி யம் என்பது வருணாசிரம ஒழிப்பு, 'அனைவருக்கும் அனைத்தும்' என்ற சமூக நீதி, சமத்துவம், சுய மரி யாதை, பகுத்தறிவு அடங் கிய "திராவிடத்தில்" உள்ளது என்பதைத்தான் 2024 ஆம் ஆண்டு நடைபெறப் போகும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் அவர்க ளுக்கு உணர்த்த விருக்கிறது.

'தென்னாடுடைய திரா விடம்' அனைத்துத் திக்குக ளிலும் அதன் கதிரொளி பரப்பி, புதியதோர் மக்க ளாட்சியை, மதச்சார்பற்ற, ஜனநாயகமாக ஆக்கிட தமிழ்நாடு காட்டும் வழியை அனைத்து இந்தியாவும் பின் பற்றும்.

காரணம், தமிழ் இந்தியா முழுவதும் பரவி இருந்த மொழி; அதன் பண்பாடு, சமத்துவ, மானிடநேயம் அதன்வலிமையைக்காட்டும்!

இவ்வாறுதிராவிடர்கழகத் தலைவர் கி.வீரமணி அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின்

தலைமை நீதிபதியாக எஸ்.வி. கங்காபூர்வாலா பதவியேற்பு!

சென்னை, மே 29-

சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியாக இருந்த முனீஸ்வரர்நாத் பண்டாரி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பணி ஓய்வு பெற்றார். இதனை அடுத்து மூத்த நீதிபதி எம். துரைச்சாமி, நீதிபதி டி. ராஜா ஆகியோர் பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்து பணி ஓய்வு பெற்ற னர். கடந்த எட்டு மாதங்க ளாக தலைமை நீதிபதி பணி யிடம் நிரப்பப்படமால் இருந்து வந்தது.

இந்நிலையில், உச்ச நீதி மன்ற கொலீஜியம் கடந்த ஏப்ரல் 19ஆம் தேதி மும்பை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த எஸ்.வி. கங்காபூர் வாலாவை, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்க மத் திய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் பரிந்துரை செய்தது. இந்த பரிந்து ரையை ஏற்ற குடியரசு தலைவர், நேற்று முன்தினம் (மே 26) எஸ்.வி.கங்கா பூர் வாலாவை தலைமை நீதிப தியாக நியமிக்க உத்தர விட்டார்.

இதனையடுத்து தலைமை நீதிபதியாக நேற்று காலை 10 மணிக்கு சென்னை கிண் டியில் உள்ள ஆளுநர் மாளி கையில் எஸ்.வி. கங்காபூர் வாலா பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி பதவி பிரமாணம் செய்து வைத்தார். இதில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் உள் பட அமைச்சர் பெருமக் கள், அரசு உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.